**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**

| M.C.O.P. No. 132/2014 | Date : 23.02.2024 | PW2 |
|---|---|---|
| Name: குணசேகரன் | S / W/o. பெருமாள்கவுண்டர் | |
| Evidence Recorded Time: 11.30 A.M. TO 11.45 A.M. | | |

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றம் மூலம் சம்மன் வரவில்லை என்றால் சரிதான். 1ம் மனுதாரர் பெருமாள் அழைத்தன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பெருமாள் எழுதிக் கொடுத்து நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் ஓட்டுநராக பணியாற்றியதற்கு ஆதாரம் மற்றும் என் ஆதார் கார்டு தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் வசித்து வருவதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். விபத்து சம்மந்தமாக ஓமலூர் காவல் நிலையத்தில நான் புகார் கொடுக்க போகவில்லை என்றாலும், எந்த தகவலும் கொடுக்கவில்லை என்றாலும் சரிதான்.1ம் மனுதாரர் பெருமாள் தாக்கல் செய்த மனுவில் என்ன சொல்லியிருக்கிறார் என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் மனுதாரர் பெருமாள் சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் குறுக்கு விசாரணையிலும் என்ன சொல்லியிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. விபத்து நடந்தது பற்றி நான் சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் தவறாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரே வந்த கார் மீது மோதாமல் இருக்க லாரி மீது மோதிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் மனுதாரர் எனக்கு என்ன உறவு முறை என்றால் நண்பர். 20 ஆண்டுகளுக்கு மேலாக எனக்கு நண்பர் ஆவார். பெருமாளின் மனைவி என்ன வேலை பார்க்கிறார் என்ன படித்திருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் துணி தைத்துக் கொண்டிருந்தார். நான் மனுதாரர்களுக்கு நஷ்ட ஈடு அதிகாமாக கிடைக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் இருந்தேன். அதனால் விபத்து பற்றி எனக்கு தெரியும்.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–PW2

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.